# மெயில் எக்ஸ்பிரஸ்:

* இடைத்தேர்தல் அனைத்திலும் தி.மு.க. பெரும் வெற்றி பெறவும், தென் மாவட்டங்களில் தி.மு.க.விற்குச் செல்வாக்கு பெருகவும் பாடுபட்டவர் அழகிரி. அவருக்கு தி.மு.க. பொதுக்குழுவில் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்கிற கவர் ஸ்டோரி, அக்கட்சிக்கு இனி போதாதக் காலம்தான் என்பதையே காட்டுகிறது.

**சிவன்மகன், தஞ்சாவூர்.**

* தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் அவமானப்பட்டுப்போன அழகிரி திருப்பித் தாக்கினால் தாங்கமாட்டார்கள். வெற்றிப் பூக்களால் தி.மு.க.வைச்சிங்காரித்து வரும் அழகிரி ஓரங்கட்டப்படுவது, குறி தவறித் தாக்கிய பூமராங் அட்டாக் மாதிரி ஒரு கை பார்க்காமல் விடாது.

**லெமுரியன், திருவண்ணாமலை.**

* தென் தமிழகத்தில் 13 மாவட்டங்களை தன் வசம் வைத்திருக்கும் அழகிரியை அவ்வளவு எளிதாகப் புறக்கணித்துவிட முடியாது. அதிலும் தமிழக சட்டமன்றத்திற்கு பொதுத்தேர்தல் விரைவில் வர இருக்கும் சூழலில் அழகிரியின் ஆதரவு தி.மு.க.விற்கு அவசியமான ஒன்றாகும்.

**ப.கோபி பச்சமுத்து, கிருஷ்ணகிரி.**

* தி.மு.க. பொதுக்குழுவில் அழகிரி-ஸ்டாலின் இருவரில், 'யாருக்கு முக்கியத்துவம் கிடைத்தது?' என்ற சர்ச்சையைக் கிளப்பி, குழப்பம் விளைவிக்கும் உமது முயற்சி பலிக்கப் போவதில்லை. தி.மு.க. என்ற ஆலமரத்தின் ஆணி வேராகக் கலைஞர் உள்ளவரை, விழுதுகளை மோதவிட்டுக் குளிர்காய நினைப்பது வீண் முயற்சி..!

**எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.**




* திருவிளையாடல் புராணத்தில் சிறப்புற வர்ணிக்கப்பட்ட ஸ்தலம் ஆனைமலை. சிற்ப நகர வடிவில் அதற்கு ஆபத்து ஏற்பட்டுள்ள தகவல், இயற்கை ஆர்வலர்களுக்கு அதிர்ச்சி அளிக்கக்கூடியதாகும். இப்பிரச்சினைப் பற்றிய மதுரை ஐகோர்ட்டின் தீர்ப்பு, ஆனைமலை நேசர்களின் வயிற்றில் பால்வார்க்கும் என்றால் அது மிகையல்ல.

**கீர்த்தி ப்ரியன், துடியலூர்.**

* 'ஆனை மலை' வெறும் மலையல்ல... மத நம்பிக்கை! அந்த நம்பிக்கைக்கு சிறிதும் சேதமில்லாது பேண வேண்டியது அரசின் கடமை.

**பி. தர்ஷினி, கும்பகோணம்.**

* ஆட்சியில் பங்கு தராமல் தமிழக காங்கிரஸை ஏமாற்றிக் கொண்டு எத்தனைக் காலம்தான் மைனாரிட்டி அரசை நடத்தி வருவார் தி.மு.க. தலைவர்? இனியாவது, தமிழக காங்கிரஸார் விழித்துக் கொண்டு தி.மு.க. கூட்டணியை விட்டு வெளியேறி, தங்கள் தலைமையிலோ அல்லது அ.தி.மு.க. தலைமையிலோ புதிய கூட்டணி அமைத்து 2011 தேர்தலில் போட்டியிட்டால், அவர்கள் தமிழக ஆட்சிக் கட்டிலில் அமர வாய்ப்பு ஏற்படலாம்.

**எம். சிவகுருநாதன், தஞ்சை.**

* ரஜினி, அஜீத் போன்றோர் தமிழ்த் திரை உலகிற்குக் கிடைத்த நல்ல நடிகர்கள் மட்டுமல்ல, நல்ல மனிதர்களும்கூட. அவர்களின் நடவடிக்கைகள், மனக் குமுறலை வெளிப்படுத்தும் ஒளிவு மறைவற்ற, துணிச்சலான நடவடிக்கையே! ரஜினி, அஜீத் ஆகிய இருவரும் தங்களின் உள்ளக் கிடக்கையை முதல்வரிடம் விரிவாகக் கொட்டித் தீர்த்தப் பின்ன

## பூவுக்குள் பூகம்பம்!